# THE ROMAN CATHOLIC DIOCESE OF KUZHITHURAI

## MOST REV. ALBERT G.A. ANASTHAS D.D., S.T.D.

**Bishop of Kuzhithurai**

: 04651 272077
: 9442451130

Bishop's House, Post Box No. 1, Unnamalaikadai - 629179, Kanyakumari District, Tamilnadu, India.


Ref. No: C/28: 2025 ஆகஸ்ட் 19, 2025

### ஆலயப் பணியாளர்களின் ஊதியத்திற்கான வழிகாட்டுதல்கள்

அன்பான அருள்பணியாளர்களே, அருள்சகோதரிகளே, இறைமக்களே!

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்களுக்கு உரித்தாகுக!

ஆலயப் பணியாளர்களுக்கான ஊதியம் குறித்த வரைமுறைகளை வழிகாட்டுதலாக வழங்குகின்றேன்.

1. ஞாயிறு மற்றும் ஒரு நாள் திருப்பலி மட்டும் நடைபெறும் கிளைப்பங்குகளில் பிற வேலைகளையும் கருத்தில் கொண்டு குறைந்தபட்சம் ரூ.5000/- வழங்க வேண்டும்.
2. வாரத்தில் 3 முதல் 5 நாட்கள் திருப்பலி நடைபெற்று மொத்த வேலைகளையும் கவனிப்பவர்களுக்கு குறைந்தபட்சம் ரூ.7000/- வழங்க வேண்டும்.
3. எல்லா நாட்களும் திருப்பலி நடைபெறும் பங்குகளில் ஒட்டுமொத்த பணிகளை ஆற்றுவோருக்கு குறைந்தபட்சம் ரூ.9000/- வழங்க வேண்டும்.
4. இந்த ஊதியத்தில் ரூ.500/-, ரூ.700/-, ரூ.900/- என்ற அடிப்படையில் R.D. கட்ட ஆவன செய்ய வேண்டும். (பாதித்தொகை பணியாளர் ஊதியத்திலிருந்தும் மீதித் தொகை பங்கிலிருந்தும் செலுத்த வேண்டும்).
5. நம் மறைமாவட்டத்தில் 01.09.2025 ஆம் நாளிலிருந்து நடைமுறையிலிருக்கும் திருப்பலிக் கட்டணங்களை முறையாக வழங்க வேண்டும்.
6. பணிநிறைவு பெற்றுச் செல்லும்போது பணவெகுமதி கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.
7. 10 ஆண்டுகளுக்குமேல் 20 ஆண்டுகள் வரை பணி செய்து ஓய்வு பெற்றிருப்பின் மாதம் ரூ.1,000/- வீதமும், 20 ஆண்டுகளுக்கு மேல் பணி செய்து ஓய்வு பெற்றிருப்பின் மாதம் ரூ.2,000/- வீதமும் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும்.
8. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதியம் மறு வரையறை செய்யப்பட வேண்டும்.
9. எந்த தொகையாக இருந்தாலும் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை பொருளர் வழியாக பெற்றுக் கொள்ள வேண்டும். தனிப்பட்ட முறையில் எவரிடமிருந்தும் பணம் பெறுதல் கூடாது.
10. பணி ஓய்வு வயது 70.

மேற்குறிப்பிட்ட வழிகாட்டுதல்களை பங்குப் பணியாளரும் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையும் செப்டம்பர் 01, 2025 முதல் பங்குகளில் நடைமுறைப்படுத்த ஆவன செய்யுமாறு பணிக்கின்றேன்.

கிறிஸ்துவில் உங்கள் அன்புள்ள,

+ A. Albert

MOST REV. ALBERT G.A. ANASTHAS * BISHOP OF KUZHITHURAI *

மேதகு ஆயர் ஆல்பர்ட் G. A. அனஸ்தாஸ்,
குழித்துறை மறைமாவட்டம்.

குறிப்பு: இத்தகவலை குழித்துறை மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளிலும், கிளைப் பங்குகளிலும் ஆகஸ்ட் 24, 2025 அன்று ஞாயிறு திருப்பலியில் வாசிக்கவும்.